பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி

முன் பக்கத் தலைப்பு விளம்பரம்

அன்றாடக் கட்டணம்:
(ஒரு தடவைக்கு) 15—00

நீடித்த ஒப்பந்தம்:
(26 முறையும் அதற்கு மேலும்)
ஒரு தடவைக்கு: 12—00

மலர் 1 | மதுரை கார்த்திகை ௩ (18-11-66) வெளியூர் கார்த்திகை ௪ (19-11-66) | இதழ் 150

# உரிமையைப் பேண வன்முறை!

## தடுக்க இயலாத ஒன்றாகும்!
### - திரு. அக்சார்

"மக்கள் தங்களுக்குரிய அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முனையுங்கால் வன்முறைச் செயல்கள் கிளம்புமேயாயின் அவை தவிர்க்க இயலாதனவாகும்" என்று ஒன்றுபட்ட நாடுகள்வையில் இந்தியச் சார்பாளர் திரு: அக்சார் கூறினர்.

நியூயார்க், நவ. 17- ஒன்றுபட்ட நாடுகளவையில் இன்று வன்முறைத் தவிர்ப்புக்காக, இந்தியா உள்ளிட்ட 11 நாடுகளின் தீர்மானம் ஒன்றின்மீது உரை நிகழ்த்திய இந்தியச் சார்பாளர் திரு. அக்சார் அவர்கள் "உலகெங்கிலும் தங்கள் வட்டாரச் சிக்கல்களை தீர்வு காண உணர்வு பிறத்தல் மதிக்கத்தக்கது. ஆனல்அவை வன்முறைச் செயல்களாய் மிரட்டல் சக்திகளாய் வளர்வதைத் தடுக்காது வாளா: விருத்தல் நடைமுறைக்கு ஏற்றதல்ல" என்ருர்.

"மக்கள் தங்களுக்குரிய தனி மனித உரிமையையும் விடுதலையையும் காப்பாற்றிக் கொள்ள முனையுங்கால்- மிரட்டல் சக்திகள் மிகுமானல், வன்முறைகள் கிளம்புவதை எவராலும் தடுக்க இயலாது" என்றும் ரொடீசியா போன்ற நாடுகளை மேற்கோள் காட்டிப் பேசினர்.

## போரில்லா உலகம் சமைத்திடக் குடியரசுத் தலைவர் வேண்டுகோள்

இராசத்தான், நவ. 17 இன்று இங்கு நடந்த இராசபுத்திர போர்வீரர்கள் அணிவகுப்பு ஒன்றை பார்வையிட்டு மரியாதை ஏற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் அவர்கள், இராசபுத்திர வீரர்களின் தீரத்தை வெகுவாகப் பாராட்டினர். தொடர்ந்து உரையாற்றிய அவர், போரில்லா உலகம் சமைத்திட மன்பதையின் பல்வேறு வகையினரும் குறிப்பாக மாணவரும் தங்கள் பங்கைச் செலுத்திட வேண்டினர்.

கடந்த காலத்தில் நம் வழிகாட்டிகளாய், வாழ்க்கை முறை கற்பித்த பேராசிரியர்களாய், தங்கள் தன்னலமறுப்பால் நம் வாழ்வில் ஒளியேற்றிவிட்ட பெரும் தலைவர்களின் கடும் உழைப்பும், விட்டுக்கொடுக்கும்மனப்பாங்கும் நம்மிடையே வளர்ந்தாலொழிய, இன்றுள்ள பூசல்கள் என்றுமே இருந்துவரும் என்றுரைத்தார்.

## ஊரடங்குச் சட்டம்

உதயப்பூர்—நவ 17, அண்மைக் கலவரங்களின் தொடர்ச்சியாக பின் விளைவுகள் ஏதேனும் ஏற்படலாம் எனக் கருதியே காவல் துறையினர் இன்று உதயப்பூரில் 720 பேரை கைது செய்தனர். நகரில் இன்று ஊரடங்குச் சட்டமும் நடைமுறையில் உள்ளது.

## ஆக்கப் பணிகளில் அரசியல் வேண்டாம்
### இந்திரா வேண்டுகோள்

புதுதில்லி நவ. 17- வறட்சிப் பகுதிகளில் ஆக்கப் பணிகள் நடத்துவதற்கு அரசியல்வாதிகள் எத்தகைய இடையூறும் செய்யாமலிருக்கும்படி இன்று இந்திரா காந்தி கேட்டுக்கொண்டார்.

நேற்று அனைத்திந்திய வானெலியில் "நேருக்கு நேர்" என்ற தலைப்பில் உரையாற்றினர். அப்போது அவர் இவ் வேண்டுகோளை விடுத்தார்-

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

வறட்சிப் பகுதிகளிலும் வெள்ளத்தால் தாக்கப்பட்ட பகுதிகளிலும் அரசுபுரிந்து வரும் ஆக்க வேலைகளுக்கு அரசியல்வாதிகள் தடையாக இருக்கக்கூடாது. அன்ருட வாழ்வியற் பொருட்களைப் பற்றிய சிக்கல்களிலும் அரசியல்வாதிகளின் தலையீடு இருக்கக்கூடாது.

ஆக்க வேலைகளில் வட்டார மனப்பான்மை தலை தூக்கக்கூடாது.

வறட்சியாலும் வெள்ளத்தாலும் தாக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவும் பொருட்டு நான் உதவிநிதி ஒன்று தொடங்க இருக்கிறேன். இந்நிதிக்குப் பணமாகவும், பொருட்களாகவும் நன்கொடை வழங்கலாம்.

இவ்வாறு தலைஅமைச்சர் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

## காமராசரை எதிர்த்து மாணவர் தலைவர் போட்டி

வத்ருயிருப்பு, நவ. 17 வருகிற பொதுத்தேர்தலில் அனைத்து இந்தியக் காங்கிரசுக் கட்சிதலைவர் திரு. காமராசு அவர்கள் சிவகாசி பாராளுமன்றத்திற்கு போட்டியிட்டால் அவரை எதிர்த்து தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக் குழுத் தலைவர் பெ. சீனிவாசன் எம். ஏ. போட்டியிடுவார் என்று தெரிகிறது. அவரைப் போட்டியிடச்செய்து தீவிரமாக வேலை செய்வது என தமிழக மாணவர் குழு முடிவு செய்திருக்கிறது. இவர் திராவிடமுன்னேற்றக்கழகத்தின் சார்பில் போட்டியிடவும் மாணவர்குழு இசைந்திருப்பதாகத் தெரிகிறது. இதற்காக தேர்தல்நிதி திரட்டும் வேலையிலும் கொள்கை பரப்பு வேலையிலும் மாணவர்குழு விரைவில் ஈடுபடும்.

பெ. சீனிவாசன் எம். ஏ பட்டதாரி. இந்த ஆண்டு செப்டம்பரோடு பி.எல். படிப்பை முடித்திருக்கிருர். தி. மு. க. வில் பலஆண்டுகாலமாக ஈடுபாடு கொண்டவர். 1962-ம் ஆண்டு நடந்த விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைவாசம் மேற்கொண்டவர்.

1965-ம் ஆண்டு சனவரியில் நடந்த மாணவர் இந்திஎதிர்ப்புப் போராட்டத்தில் தொடர்ந்து இரண்டுமுறை] சிறை சென்றவர். அடுத்து பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் இருந்தார்.

இவருடைய சொந்த ஊர் திருவில்லிபுத்தூரை அடுத்த அட்பயநாயக்கர்பட்டி. தமிழ்நாடு காங்கிரசுத்தலைவர் ஆர். கிருட்டிணசாமி நாயுடுவுக்கு உறவினர். கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு ஆண்டும் மாணவர் மன்றத் தலைவராகவும், இருந்திருக்கிருர். பல் பேச்சுப் போட்டிகளில் பரிசு வாங்கியவர்.

## தேவர் பிறந்தநாள் விழா!

தென்னட்டு விவேகாநந்தர் எனப்படும் முத்துராமலிங்கத் தேவரின் 59-வது பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் திருப்பரங்குன்றத்தில் 12-11-66 சனிக்கிழமை மாலை ஏழுமணியளவில் நடைபெற்றது. திரு. ஐயாவு சேர்வை தலைமையில் திருவாளர்கள்



பி. கே. மூக்கையாத் தேவர், பி. ஏ. எம். எல். ஏ, கரு. சீமைச்சாமிபி.ஏ.எம். எல்.ஏ, ஆர். பெருமாள், கந்தசாமி பி. ஏ, பி. எல். ஐ. பி. எம். பெரியசாமி, கே, சி. வீரராகவன் பி.ஏ, எசு. என். இரத்தினம், விருதை வேலு முதலியோர் தேவரின் சிறப்பியல்புகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

## "குறள்நெறி" நாளிதழ் உதவி நிதி
### நன்கொடை அளித்தோர் பட்டியல்:

எட்டி மங்கலம் பெருமக்கள் சார்பில் (கரு. சேது அவர்கள் வழியாக) உரு. 15-00

நன்கொடை அளித்தோருக்கு நன்றி. அன்பர்கள் அவரவர்களால் இயன்றவாறு உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

—ஆசிரியர்

**வெள்ளத்தால் துன்புற்றோர்க்கு விரைந்து உதவுக.**

குறள் நெறி
தமிழ் வாழ்க
தி. வ. ஆண்டு ௧௯௯௭ கார்த்திகை ௩ வெள்ளி

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. ௩௮௫

# அச்சுறுத்தும் உணவு நிலை

**நமது** நாடு உணவு நிலையில் தன்னிறைவு பெறவில்லை. ஆண்டுதோறும் மழைப் பெருக்காலும் மழையின்மையாலும் விளைவு பாழ்படுகின்றது. "கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை" எனும் தமிழ்மறை முற்றிலும் உண்மையாகிக் கொண்டே வருகின்றது. உணவுப் பொருட்களுக்காக அயல்நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பது நாட்டின் தன் மதிப்புக்கு ஏற்றது ஆகாது. "நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல நாட வளம் தரும் நாடு" இவ்வாறு கூறி இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆயினும் நம் நாடு பிற நாடுகளை உணவுப் பொருளுக்காக நாடிய வண்ணமே யுள்ளது. வறுமை நிலையால் பட்டினி கிடப்போர் ஒரு புறமிருக்க, வளமுடையோரும் பட்டினி கிடக்க வேண்டுமென்று அரசு காணும் நிலையை அடைந்துள்ளோம்.

இந்தியக் கூட்டரசின் உணவு அமைச்சர் தில்லி மேலவையில் "வரும் சில மாதங்கள் உணவுத் துறையில் தாழ்நிலையடைவனவாயுள்ளன" எனக் கூறியுள்ளார்: இயற்கையால் உண்டாகும் இடர்பாடுகள் ஒருபுறம் இருக்க, செயற்கை முறையாலும் உணவுப் பற்றுக்குறையை உண்டு பண்ணுகின்றோம். உணவுப் பொருள் கட்டுப்பாடும் ஒழுங்கற்ற பங்கீட்டு முறையை உணவுப் பற்றுக்குறையைத் தோற்றுவிக்கும் செயற்கை முறைகளாகும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என வள்ளுவர் கூறியிருப்பினும், கட்டாயப் பங்கீட்டைச் செவ்வன அரசு அமைக்கவில்லை. இப்பொழுது பங்கீட்டுமுறை இருட்டு வாணிபத்தையும் கொள்ளை ஊதியத்தையும் பெருக்குகின்றதே தவிர நினைத்தவாறு எல்லார்க்கும் எல்லாப் பொருளும் கிட்டவில்லை. ஆகவே மக்களைச் செம்மை நெறி செல்லுமாறு செய்தல் அரசின் கடனாகும். ஆனால் அரசாளும் கட்சியில் உள்ளோரே அறவழி நடப்பதே அரிதாயுள்ளது. உணவுப் பற்றுக்குறை நிலையைப் பயன்படுத்தி மிகு பொருள் ஈட்டலைக் குறிக்கோளாகக் கொண்டு செயல் படுகின்றனர். உணவுக் கொள்கை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாகும்" எனத் தலைமையமைச்சர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையே. ஆனால் கூறுகின்றவாறு செயல்படுகின்றது அரிதாயுள்ளது. கட்சிக் கண்ணோட்டம் புகுந்துவிடுகின்றது. ஆகவே கட்சி அரசியல் ஒழியவேண்டும் எனக் கூறுகின்றோம்.

மக்களின் நல்வாழ்வுக்கு அடிப்படை உணவே, அதனாலேயே "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்" என்றனர் நம் முன்னோர். இம்முதன்மையான உணவுக்கொள்கையை கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக்கி அரசுத்தலைமையிடையும் குறைத்துக்கொண்டால், உணவுநிலை அச்சுறுத்தாது எனக் கூறிக்கொள்கிறோம். போதுமான உணவுப்பொருள்கள் உள்ளன. ஆனால் "ஈட்டல், காத்தல், வகுத்தல்" ஒழுங்குற நடைபெறுததனால்தான் உணவுப் பற்றுக்குறை தோன்றியுள்ளது, என்ற கூற்றும் ஆராயத்தக்கது. எங்ஙனமாயினும், அச்சுறுத்தும் உணவு நிலைமையை அகற்ற அனைவரும் ஒன்றுபடல் வேண்டும்.

## "மாணவர்கள் தொடர்வண்டி நிறுத்தப் போர் தொடர்கிறது"

[ கு. செ. து. ]

கோவைக்கும் மேட்டுப்பாளையத்திற்கும் இடையே ஓடுகின்ற தொடர்வண்டியில் குறைந்த அளவு பெட்டிகளே இணைக்கப்பட்டுள்ளன ஒவ்வொரு திங்கட் கிழமையும் துடியலூரில் சந்தை கூடுவதால் மக்கள் கூட்டம் அதிகமாகிறது இதனால் அப் பகுதியிலிருந்து கோவை வரும் மாணவர்களுக்கு இடமில்லாக்குறை ஏற்படுகிறது.

இதைக்கண்டித்தும், இன்னும் மிகுதியான பெட்டிகளை இணைக்கவேண்டியும்மாணவர்கள் தொடர்வண்டியை நிறுத்தினர். தொடர்வண்டி இயக்குனர் மீண்டும் இயக்க முயற்சிக்கையில் மாணவர்கள் வண்டியைப் போகவிடாது தடுத்தனர்.

பின்னர் கோவையிலிருந்து அலுவலர்கள் வந்து மாணவர்களின் வேண்டுகோள் ஆயப்பட்டு செயல்படுத்தப்படுமென்று உறுதி கூறிய பின்னரே, தொடர்வண்டி மீண்டும் ஓடத் தொடங்கியது.

இதன் காரணமாய்தொடர்வண்டி இருநூறு நிமிடங்கள் தாமதித்தே கோவை வந்தடைந்தது.

## ஈரோட்டில் அனைத்துக்கட்சி உணவுக் கிளர்ச்சி!

ஈரோடு, நவ. 17-
ஈரோட்டில் 6-11-66 இல் அனைத்துக்கட்சிகளின் சார்பாக உணவுக் கிளர்ச்சியை ஒட்டி மாபெரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன, அவ்வமயம் பலர் மக்கள் படும் துன்பங்களை விரித்துப் பேசினர்.

## செய்தி இதழ்க் கண்காட்சி!

குழித்தலை, நவ. 16—
குழித்தலை கடம்பர் கோயில் பள்ளித்திடலில் நடைபெறும் சா. க. நிலைவு இரண்டாவது இலக்கிய விழாவின் போது "தமிழகம் தந்த தமிழ்ச் செய்தி ஏடுகள்: என்ற செய்தி பத்திரிகை இதழ்க் கண்காட்சி நடைபெறுகிறது.

600 பத்திரிகைகள்—தமிழகத்து ஏடுகளின் கல்வெட்டு ஆராட்சியைப் போல் காட்சி தரும்.

செய்தி ஏடுகளின் பணியும் குறித்து —கண்காட்சியைத் திறந்து வைத்து செய்தித்துறையில் சிறப்புப்பணியாற்றி வரும் செய்தி ஆசிரியர் மதுரை தினத்தந்தி தலைமை ஆசிரியர்திரு. வி, சின்னசாமி சிறப்புவிக்கிறார். திறப்பு விழா 3-12-66 சனிக் கிழமை.

## தஞ்சை தி.மு.க. பொதுக்கூட்டம்

நேரம்: 15-11-66 செவ்வாய்க் கிழமை மாலை 6-30 மணி
இடம்: பூக்கார வகுதாத்தெரு
தலைவர்: தத்துவ மேதை திரு. தி. கோ. சீனிவாசன்
சொற்பெருக்காற்றுவோர்:
திரு.நா.காமராசன் எம்.ஏ.,
,, எசு. நடராசன், எம்.சி,
,, யா. சேவியர்,
,, சாமி அன்பன்,
,, து. கருப்பையன்.

—✱—

## நம்பிக்கையிலாத் தீர்மானம்!

ஈரோடு, நவ. 17—
ஈரோட்டுக்கு அண்மையில் உள்ள பெரிய அக்கிரகாரம் நகர ஊராட்சிமன்ற உறுப்பினர் 14 பேர்களில் 10 உறுப்பினர்கள் ஊராட்சித் தலைவர் மீது நம்பிக்கை இல்லையென்று ஈரோடு வட்ட ஆட்சியாளரிடம் விண்ணப்பம் செய்துள்ளனர்.

# குறள்நெறிச் செய்தித் துறை

## தி. மு. க. கூட்டத்தில் கல் வீச்சு!

( கு. செ. து. )

திருவில்லிபுத்தூர்—நவ 15
இராமநாதபுர மாவட்டம் திருவில்லிபுத்தூரை அடுத்துள்ளது கோட்டைப்பட்டி. இங்கு தி.மு. கழக கிளையான எம். சி. ஆர். மன்றம் உளது. இதன் துவக்க விழாப் பொதுக்கூட்டம் திரு. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. முன்னாள் காவல்துறை - திரு. கண்ணன் திரு. அங்கையா, தி. மு. கழகப் பிரமுகர் திரு. எசு. டி. கொழுந்து ஆகியோர் பேசினர்கள். அக்கூட்டத்தில் காங்கிரசக்காரர் தூண்டுதலின் பேரில் சில காலிகள் கற்களை எறிந்தனர்.

அதற்குப் பிறகு ஏற்றிய கழகக் கொடியை இறக்கும்படி கழகத் தோழர்களை அந்த ஊர் மக்கள் காங்கிரசு கட்சியினர் தூண்டுதலால் வற்புறுத்தி வந்தனர்.

அதற்கு இணங்காததால் சிலரது உதவியால் பொய் வழக்கு போடப்பட்டது. கழகத் தோழர்களுக்கு பல வகையிலும் இன்னல் தந்து வருவதாக கோட்டைப்பட்டி புது காங்கிரசுக்காரர் பாலையா உட்பட 10 பேர்களை குறித்து கழகத் தோழர்கள் விண்ணப்பம் அனுப்பி இருக்கின்றனர்.

அவ்விண்ணப்பம் மாவட்ட காவற்துறை அதிகாரி, வட்ட காவற்துறை அதிகாரி முதலியோருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

## ஈரோட்டில் அண்ணா!

—நமது செய்தியாளர்

ஈரோடு.நவ. 17—
ஈரோட்டில் அறிஞர் திரு. அண்ணா அவர்கள்பலநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

ஈரோட்டுக்கு அண்மையில் உள்ள வீரப்பன் சத்திரம் பெரிய அக்கிரகாரம் ஆகிய இரு ஊராட்சி மன்றங்களும் வரவேற்பு அளித்துப் பாராட்டின.

சிக்கயப்பெருமகனார். பெருமக்கள் கல்லூரி மாணவர் மன்றத்திலும் அறிஞர் அண்ணா கலந்து கொண்டார். அவ்வமயம் சு. ம. சண்முகசுந்தரனார். அவ்வமயம் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களாட்சிப்பண்பு நன்கு வளரவில்லை என்றும் வளரவேண்டுமானால் கற்றோர் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார். செயலர் திரு சக்திவேல் நன்றியுரை கூறினார்.

ஈரோடு நகராட்சி குடியிருப்புத் திடலில் நடந்த மாபெரும் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களிடம் ஈரோடு நகரத்தின் சார்பாக தேர்தல் நிதிக்கு ரு 4000 அளிக்கப்பட்டது. ஈரோடு வட்டத்தில் சிற்றூர் பகுதியில் தேர்தல் நிதிக்கு ரு. 6,000 அளிக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் தேர்தல் நிதியாக ரு. 65,000 அண்ணாவிடம் அளிக்கப்பட்டது எனவும் அறிவிக்கப்பட்டது.

ஈரோட்டுக்கு அண்மையில் உள்ள மொடக்குறிச்சி, குன்றத்தூர் முதலிய ஊர்களிலும் அண்ணா சென்று தேர்தல் கொள்கைவிளக்கம் செய்தார்.

மொடக்குறிச்சி தொகுதியில் சம்யுக்த சோசலிச்டு வேட்பாளர் நல்லசிவம் வெற்றிப் பெற தி. மு. க. ஒத்துழைக்கும் என்றும் பொள்ளாச்சி தொகுதியில் தி.மு.க. வேட்பாளருக்கு ச. சோ. கட்சி ஒத்துழைப்புநல்கும் என்றும்அண்ணா அறிவித்தார்.

வெள்ளைக் கோவில் தொகுதியில் அமைச்சர் மன்றாடியாரின் உறவினர் குட்டபாளையம் சாமிநாதன் தி. மு. க, வேட்பாளராக நிற்பார்என்று எலுகாம்வலசு என்ற ஊரில் நடந்த கூட்டத்தில் அண்ணா அறிவித்தார்.



இயற்றிய வாழ்நதுப் பாவை மாணவர் மன்றச் செயலர் அறிஞர் அண்ணாவுக்கு வரவேற்று வழங்கினர்.

ஈரோடு வழக்குரைஞர் மன்றத்திலும் அண்ணா கலந்து கொண்டு சொற்பெருக்காற்றி

## சிக்கனமாம் சிக்கனம்!

சிக்கனச் சீரமைப்பு பற்றி நாளும்பொழுதும் பொது மேடைகளில், பாமரர்களிடையே முழக்கமிடும் ஆளும் கட்சியினரின் மாய்மாலங்களை தெள்ளத்தெளிய தெரிவிக்கிறது. அவர்தம் "அரியானா" அமைச்சரவை. [illegible] பினர்கள் கொண்டுள்ள அந்த அரியானா அமைச்சரவையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 41 பேர்கள்.

| | | |
|---|---|---|
| அவர்களில் அமைச்சர்கள் | 11 | பேர்கள். |
| துணை அமைச்சர்கள் | 5 | ,, |
| பாராளுமன்றச்செயலர் | 2 | ,, |
| மன்றத் தலைவர் | 1 | ,, |
| துணைத் தலைவர் | 1 | ,, |
| மொத்தம் | 20 | பேர்கள் |

50 விழுக்காட்டு உறுப்பினர்கட்கு அதிகார மது ஊற்றி ஆடிக் குதிப்பதற்குப் பெயர்தான் சிக்கனச் சீரமைப்பா? அந்த அவைக்காகும். ஆண்டுச செலவு 2 ரு. 322 நூறாயிரங்களாம், என்ன கொடுமை? ஏழுவருக்கு மேற்பட்ட அமைச்சரவை அமைத்திடல் கூடாது என்று 'காந்தியார்" முழக்கமிட்டது இவர்கட்குப் புரியாதோ......!

## வால்பாறையில் அறிஞர் அண்ணா

வால்பாறை—நவ. 17
அறிஞர் அண்ணா வால்பாறைக்கு வருகை தந்தார். நகர விளையாட்டரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு நிற்க இருக்கும் சுக்காமலை இராமசாமி தலைமை தாங்கினார். உடுமலை நாராயணன், பொள்ளாச்சி கண்ணப்பன், கோவை இராமனுதன், சிட்டிபாபு, முதலியோர் கலந்து சொற்பொழிவு ஆற்றினர். இறுதியாக அண்ணா சொற்பொழிவாற்றினார்கள். சொற்பொழிவில் அண்ணாவிடம் 2000 ரு தேர்தல் நிதி அளிக்கப்பட்டது. அண்ணா தமது பேச்சில், ஏழைகள் கொடுக்கும் பணத்தில் வேர்வை படிந்துள்ளது என்றும், செல்வந்தர் பணத்தில் குருதிக்கறை படிந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். காங்கிரசு கட்சியை தேர்தலில் தோற்கடித்தால் தான் நாட்டுமக்கள் நன்மை அடைவார்கள் என்றும் குறிப்பிட்டு தேர்தலில் வால்பாறை தொகுதியில் நிற்கும் தி. மு. க. அபேட்சகரை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்,

## வள்ளுவர் மன்றம்.

வால்பாறை—நவ. 17
வால்பாறை வட்டத்தில் உள்ள நல்லகத்தில் வள்ளுவர் மன்றத் துவக்கவிழா நடைபெற்றது. திரு. தேவசகாயம் தலைமை தாங்க புலவர் பாண்டியன் வள்ளுவர் படத்தைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினர். புலவர் மாரிவிசுவநாதன் "குறள் நெறி" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். செயலாளர் முத்தையா நன்றிகூற விழா முடிந்தது.

## பெருமழை

வால்பாறை—நவ. 17
அடை மழையின் காரணமாக வால்பாறை நகரத்தின் தாழ்வான பகுதியாகிய சிதம்பர நகரில் அருவிப் பெருக்கெடுத்து புகுந்தது. குடிசைகள் மிதந்தன. மாடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மக்கள் பள்ளிகளில் வந்து தங்கிக் கொண்டனர். சோலையாறு அணைக்கட்டுப் பகுதியில் ஐந்து லட்சத்திற்கு மேலான பெறுமானமுள்ள பொறிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. ஆளியார் அணைக்கட்டு நிரம்பி வழிந்தது. அணைக்கட்டிலிருந்து வால்பாறைவரை மலைப்பாறைகள் சரிந்து பாறைகள் அறவே தடைப்பட்டன. தேயிலைத் தோட்டங்களில் மலைச்சரிவினால் பேரழிவுகள் உண்டாயின. அட்டக்கட்டிக்கு அருகாமையில் உள்ள கருமுட்டிமலை சரிந்து வெள்ளாமையே அழிந்துவிட்டது. நாகமலையில் அருவியின் ஓரமாக இருந்த குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பத்துப் பேராவது இறந்திருப்பர் என்று அஞ்சப்படுகிறது. நெடுஞ்சாலையில் மலைப்பாறைகள் ஆங்காங்கே உருண்டு கிடக்கின்றன.

## தேவை

குறள்நெறி நாளிதழ் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை.

இப்படிக்கு
செயலர்,
குறள்நெறி.

# அரசியலில் நமது நெஞ்சோட்டம்

'சொக்கி'

## தில்லிக்கலகம்

நந்தாவை பதவி நீங்க வைத்த தில்லி கலகம், கூட்டரசின் அமைச்சர்களைநாற்காலி மாறி உட்கார வைத்திருக்கிறது.

பசுக்கொலை செய்வதை தடுக்க என்பதன் பெயரால் பெரிய புரட்சியே மூண்டுதலை நகரைக் கலக்கி இருக்கிறது.

பசுக்கொலைத் தடுப்பைச் சட்ட சம்மதமாக்க வேண்டும். அல்லாவிடில் பத்து நூறாயிரம் பேர் கொண்ட மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு பாராளுமன்றத்தை வளைத்து முழக்கமிடும் என்று ஏற்கனவே, சம்பந்தப்பட்ட இயக்கத்தினர் வெளிப்படை அறிவிப்பு விடுத்திருந்தனர்.

அவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டஎல்லைக்குச் சிக்கலைவிட வேண்டாம் என்ற எண்ணம் தில்லி அரசுக்கு இருந்திருக்குமானால், கலகம்நிகழவிடாமலே தடுத்திருக்க முடியும்.

பசுக்கொலை கூடாது என்பதில் எந்தமந்திரியும் வேறுபடவில்லை. கூடாதுதான் என்று அரசுத் தரப்பும்ஒப்புக்கொள்கிறது. எல்லாக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாய்க் கூறிவிட்டனர். வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சிக்கலுக்கு சட்ட இசைவளிக்க அரசு உறுதி கூறி, வேண்டாத நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாம். செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. நடக்க வேண்டாதது நடந்துவிட்டது.

இதற்கு உள்துறை அமைச்சர் பதவியைத் தாங்கிவந்த நல்லொழுக்க நோக்கம் கொண்ட ஒரு நல்லவரை வெளியேற்றி இருக்கத் தேவையே இல்லை. நந்தா, தனிப்பட்ட முறையில், செய்யத் தவறிய செயல் எதுவுமே இல்லை. எல்லா அமைச்சர்களும் சேர்ந்த கூட்டுப் பொறுப்பில் இயங்கும் ஒரு அரசு. நிகழ்ச்சியையே நிகழவிடாமல் தடுத்திருக்க வேண்டியதைச் செய்யத் தவறி நிகழ்ச்சியைக் கவனமாகச் செய்துவிட்டு, அதைத்தடுக்கத் தவறிவிட்டார் உள்துறை அமைச்சர் என்று தனிக்குற்றஞ்சாட்டி வெளியேற்றிஇருப்பது. கூட்டுப்பொறுப்புக்கே இழுக்காகும். இதே மாதிரி ஏற்கனவே சில அமைச்சர்களைக் கூட்டரசு, தனிக்குற்றம் சாட்டி வெளியேற்றி இருக்கிறது.

இந்த வெளியேற்றத் தொடர் நீடித்தால், நல்ல திறமைசாலிகள், கூட்டுப் பொறுப்பை நம்பி, அமைச்சரவையில் இடம்பெற வரமாட்டார்கள்

தனது வெளியேற்றத்திற்கான சுற்றுக் காரணங்களை விளக்க நந்தாவெளியிட்டுள்ள அறிக்கையும்,திருமதி இந்திராகாந்திக்கு எழுதியுள்ள கடிதமும், ஒரு சிலரின் தன்மூப்பில் சிக்கித் தவிக்கும் கூட்டரசின் அவல நிலையை அம்பலப் படுத்துகின்றன. அதோடு நந்தா, வெளியேற்றப்பட்டதற்குக்காரணம்,பசுக்கொலைத் தடுப்பு ஆர்ப்பாட்டத்தைத் தடுக்கத் தவறியதல்ல. வேறு பல தனிப்பட்ட பொருமை காய்ச்சல்களும், நந்தாவின் கண்ணோட்டமில்லா நடவடிக்கைகளும் தான் என்பதையும் அவ்வறிக்கைமூலம்பொது மக்கள் உணரத் தவறவில்லை. தமது செயல்களுக்கு, தமக்கு மேலுள்ள தலைமை அமைச்சரும் ஒத்துழைக்கவில்லை. தமக்குக் கீழுள்ள செயலாளரும் அடங்கி நடக்கவில்லை என்று நந்தா கூறிச் வருந்துவதைப் பார்த்து நாடே வருந்துகிறது.

உள்துறை அமைச்சரின் விருப்பத்திற்கு ஒன்றுமே இல்லை. எல்லாச் செயல்களுமே தலைமை அமைச்சரின் ஆணை மீதே என்பதையும் பொறுப்புள்ள நந்தா விளக்கி விட்டார்.

இதற்கு தலைமை அமைச்சுத் தரப்பிலிருந்து உறுதியான மறுப்பும்பிறக்கவில்லை, ஆனால் இப்படி ஒரு உண்மை விளக்க அறிக்கையை காங்கிரசக்காரரான நந்தாவே வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவிக்கப் படுவதோடு, உண்மையை வெளியிட்டநந்தா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் முயலப்பட்டிருக்கிறது. காங்கிரசுக்கட்சியில் "உண்மை" ஒழுங்கீனப் பொருளாகிவிட்டது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டாம்.

காங்கிரசு மேலிடம் நந்தா மீது எடுத்துள்ள நடவடிக்கையே, தில்லிக்கலவரத்தைத் தடுக்கத் தவறியகுற்றம் நந்தாவுக்குமட்டுமல்லகூட்டரசுக்கேதான் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

நந்தாவுக்கு திறமைமட்டும் போதுமா. அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த பதவியைத் துவளாமல் வகிக்கும் தகுதி உண்டா என்பனவெல்லாம் இன்று அரங்கிற்கு வர வேண்டாத கேள்விகள். ஆனால் நந்தா நல்லவர். கண்ணோட்டமற்றவர், நல்லதைச் செய்வதில் நாட்டமுள்ளவர். தமக்காத பதவியைப் பயன்படுத்திக் கொள்ளாதவர். தன்னல மறுப்பாளர். கட்சிப்பற்று மிக்கவர். அமைச்சர் பொறுப்புக்கு வந்த பிறகு கட்சியை விட நாடு பெரிது என்று கருதிச் செயல்பட்டவர். என்பதில் எவருமே மாறுபட முடியாது. உயர்ந்த பண்பாடுடையவர் என்பதையும் எல்லோரும் ஒப்புக்கொள்வதால், அவரது அறிக்கையையும், கடிதத்தையும் நாடு நம்புகிறது. நம்புவதால்தான், நந்தா வெளியேற்றப்படுவதற்குக் காட்டப்படும் காரணம் போதவே போதாது—அதுதான் போதிய காரணம் என்றால், நந்தாவுக்கு முன் வெளியேறி இருக்க வேண்டியவர் திருமதி இந்திராகாந்தியே என்று நாடு கருதுகிறது.

இதேபோலத்தான் பசுக்கொலைத் தடுப்புக்கு நடத்தப்பட்ட ஆர்பாட்டத்திற்கும் போதிய காரணம் தெரியவில்லை என்று நாடு சொல்லுகிறது.

பசுக்கொலைத் தடுப்பு என்பது, பெரிய நாட்டின் மிகப் பெரிய பல செயல்களில் ஒரு சாதாரண வேண்டுகோள். இதற்காக இத்தனை நூறாயிரம் பேர் கொண்ட மிகப் பெரிய ஊர்வல ஆரவாரத்திற்கும், அதைத் தொடர்ந்து தீயவரின் தலையீட்டால் வேண்டா நிகழ்ச்சிகள் நிகழவும் அடியிட்டிருக்க வேண்டியதே இல்லை—பசுக் கொலை தடுப்பு இயக்கத்தினர்.

ஆர். எசு. எசு, சனசங்கம் போன்ற பெரிய இயக்கங்களுக்கு தூய கோட்பாடுகள் உண்டு—கட்டுத்திட்டங்கள் உண்டு—நாட்டுப் பற்று உண்டு என்று மக்கள் நம்பவே செய்கிறார்கள். அவ்வியக்கங்களின் வலிமையை வெளியிட வேறுபல உறுப்படியான செயல்கள் எத்தனையோ இருக்கின்றன. பசுக்கொலைத் தடுப்புக்கு மக்களிடம் எதிர்ப்பே இல்லை. சாதாரண முயற்சி மூலமே பசுவதையை, மக்கள் ஆதரவோடு தடுத்துக் கொள்ள முடியும். இடைவெளி பார்த்து உட்புகுந்து, மக்களை அச்சப்படுத்தி பொதுச் சொத்துக்களை நாசமாக்கும் கேடர்களுக்கு வாய்ப்பளிக்கும் பயங்கரக் கலவரமாக மாறிவிட்டது, பசுக்கொலைத் தடுப்பு இயக்கம் என்ற தூய இயக்கம்.

ஒரு எளிய வேண்டுதலுக்காக இத்தனை பெரிய ஆரவாரம் தேவைப்படுகிறதா? என்ற அளவுக்கு வெளிநாடுகளில் கேள்வி கிளப்பும் வேண்டாத நிலையை ஏற்படுத்தி விட்டது ஏழு நூறாயிரம் பேர் கொண்ட ஊர்வலமும், ஆரவாரமும்!

"குறள்நெறி" நாளிதழ்க்கு
ஆண்டு உறுப்பினர் கட்டணம் உரு. 25 அனுப்புங்கள். அன்னைத் தமிழ்த் தொண்டுக்கு உதவுங்கள்.

மதுரை : 18—11—66 வெள்ளி

# குறள்நெறி

வெளியூர்: 19—11—66 சனி

# ஆளும் கட்சியினரின் வன்முறை!

## மாணவர் தலைவர் பெ. சீனிவாசன் எதிர்ப்பு

வற்றுயிருப்பு, நவ. 14–

வற்றுயிருப்பை அடுத்துள்ள சுந்தரபாண்டியத்தில் தி. மு. க. சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழக மாணவர் தலைவர் பெ. சீனிவாசன் எம். ஏ. கூறியதாவது:–

"மனிதர்களின்எண்ணிக்கையில் முடிவு செய்ய வேண்டிய மக்களாட்சி முறைக்கு மாறாக மண்டை ஓடுகளின் எண்ணிக்கையை ஆளும் கட்சியினர் நாளுக்குநாள் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர். நூல் நிலையங்களில் அறிஞர்களின் பேரேடுகளில் காண வேண்டியமக்களாட்சிக்கொள்கைகளை ஆயுதசாலைகளின் பேரிரைச்சலில் தேடிக் கொண்டிருக்கின்றனர். எண்ணற்ற இளைஞர்களின் இதயங்களில் கொலுவீருக்கும் தமிழ்க்காவலர் அறிஞர் அண்ணா அவர்களைத் தாக்கவும் காங்கிரசார் முயன்றிருக்கின்றனர்.

வாளெடுத்தவன் வாளாலேயே மடிவான் என்ற விவிலிய நூலின் உண்மையை வன்முறையாளர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

நாட்டிலுள்ள நல்லோர்கள் ஆசிரியர்கள், நடுத்தர நிலையினர், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் அரவணைப்பில் ஓங்கி வளரும் கழகத்தை இத்தகைய கீழ்த்தரமான வன்முறைகளால் ஒழிக்க முடியாது என்பதை ஆளும் கட்சியினர் உணர்ந்து கொள்ளவேண்டும்" இவ்வாறு சீனிவாசன் பேசி முடித்தார்.

இதற்குப்பின் இராசபாளையம் இரட்டையர்களான 'டேப்' மணி-சாமி குழுவினரின் இன்னிசைக் கச்சேரி கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது.

கட்டையப்பன் நன்றி கூறினார்.

## அனைத்துக் கட்சியினர்க்கும் அன்பார்ந்த வேண்டுகோள்

தமிழ்க்காப்புப் பணியில் ஈடுபட்டதனால் வெஞ்சிறைப்பட்டும் பதவியை இழந்தும் பல இன்னல்களுக்கு ஆளாகியும் உள்ள என்னை அனைத்துக் கட்சியின் சார்பாகத் தேர்தலுக்கு நிற்க உதவுமாறு அன்போடு வேண்டுகின்றேன். திருப்பரங்குன்றத் தொகுதியில் நான் நிற்கப்போவதால் வேறு யாரையும் நிறுத்தாது அனைத்து எதிர்க்கட்சிகளும் என்னையே தத்தம் கட்சிச் சார்பாளனாகக் கொள்ள வேண்டுகின்றேன்.

இந்திக்கு முதன்மைதரும் காங்கிரசுக்கு எதிராக என்னை ஒருவனையே நிறுத்தி வெற்றிவாய்ப்பு ஏற்பட வழிகோலுமாறு எல்லா எதிர்க்கட்சியினரையும் அன்போடு வேண்டுகின்றேன். எனதுவெற்றி தமிழின் வெற்றியாகும். இந்தியின் தோல்வியாகும்.

சி. இலக்குவன் [signature]

# 300 குடில்கள் மூழ்கின! உருபா 50,000 இழப்பு கோவையில் பெரு மழை!!

(கு. செ. து,)

கோவை—15

கோவை மாவட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த மழையின் காரணமாக 300 குடில்கள் அழிந்தும், உருபா 50,000 வரை இழப்பும் ஏற்பட்டுஉளளது என்றும்மாவட்டத் தணடல் நாயகம் செய்தியாளர்கள் இடையில் அறிவித்தார்.

ஆனால்முன்னறிவிப்புக் காரணமாக உடுமலை, தாராபுரம் வட்டங்களில் அமராவதிக் கரையோர மக்களின் உயிர் இழப்பு தவிர்க்கப்பட்டது என்று கூறினார்.

இந்த மழையின்காரணமாக நெல்அறுவடையும் நிலக்கடலை பயிரும் தாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆளியாறு, திருமூர்த்தி அணைகளும் ஏரி குளங்களும் நிறைந்து விட்டன. நெல் அரைப்பும் தாக்கப்பட்டு உள்ளது. எனவே பங்கீட்டுப் பண்டகசாலைகளில் அரிசிப் பங்கீடு காலத்தாழ்வுஏற்படும் என்றும் அவர் அறிவித்தார்.

…0…

## தி. மு: கழக மாநிலமாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமா?

திருவில்லிபுத்தூர், நவ 7

திருவில்லிபுததூரிலிருந்து தனி உந்துவணடி மூலம சென்னை மாநில மாநாட்டிறகு செல்ல திட்டமிட்டுள்ளோம. கலந்துகொள்ள விரும்புவோர் ரூ. 40/– செலுத்தி தங்கள் பெயரை பதிவு செய்து கொளள வேண்டுகிறோம.

**எம். டி. சந்திரன்** எம். சி;
அமைப்பாளர்,
உதயசூரியன் சுற்றுலா,
வடககு இரத வீதி,
திருவில்லபுத்தூர்.

★

## தொடக்க விழா!

வத்திராயிருப்பு, நவ. 16—

வத்ருயிருப்பை அடுத்த தானகாபுரத்தில இளங்கோ இளைஞர் மன்ற தொடக்க விழா பள்ளித் தலைமை ஆசிரியர் அழகர்சாமி தலைமையில நடைபெற்றது. என். எசு. நல்லுசாமி மன்றத்தை திறந்து வைத்து வாழ்த்துக் கூறினார்.

இரவில் "மலர்ந்த வாழ்வு" என்னும் நாடகம ஊராட்சி தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இராமசாமி நன்றி கூறினார்.

# பொறிஇயல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வர்

## காட்டூர்கோபால் அறிவிப்பு

கோவை, நவ, 16

"இடைக்கால ஊதிய உயர்வு வழங்கப்படாவிட்டால், சுமார் எட்டாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வர்" எனக் காட்டூர் கோபால் (தி. பொ. தொ. மு. ச) அறிவித்தார்.

ஊதியக் குழு வரையறுத்த இடைக்கால ஊதியத் திட்டப்படி எல்லாத் தொழிலக உரிமையாளர்களும் செயல்பட வில்லை. பதினைந்து தொழிலக உரிமையாளர்கள் இவ்வூதிய உயர்வு கொடுக்க மறுக்கின்றனர். இதை எதிர்த்துப் போராட்டம் தொடங்குவதென அனைத்துத் தொழிலாளர் அமைப்புகளும் முடிவு எடுத்தன.

அதன்படி இத்திங்கள் 24ம் நாளுக்குள், தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படாவிட்டால் 25ம் நாள் வேலை நிறுத்தம் தொடங்கப் பெறும்.

### எட்டாயிரம் தொழிலாளர்கள்!

இவ்வேலை நிறுத்தத்தில் எட்டாயிரம் தொழிலாளர்கள் கலந்துகொள்வர். வேலை நிறுத்தத்திற்கான அறிவப்பு எல்லாத் தொழிலக உரிமையாளர்களுக்கும் அனுப்பப் பட்டு விட்டதென காட்டூர் கோபால் அறிவித்தார்.

★

# கோவையில் குழந்தைகள் நாள் விழா!

—கு. செ. து—

கோவை—நவ 15

மறைந்த நேருவின் 79–ஆம் பிறந்தநாள் விழா கோவையில் கொண்டாடப்பட்டது. விழாவில் 10,000 பள்ளி மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஆரம்பப்பள்ளி மாணவிகளின் சார்பாக கோவை சிதம்பரம் பூங்காவில் அணிவகுப்பும், விளையாட்டும் நடைபெற்றது. விழாவில் மாவட்டத் தண்டல் நாயகம் திரு. அம்புரோசு, மாவட்ட தலைமை காவல்துறை அலுவலர் திரு. பாச்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உயர்நிலைப்பள்ளி மாணவிகளின் விழா மாதர் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. விழாவில் வண்ண உடைகளுடன் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## இடமாற்றம்

20–11–66-ம் நாள் நடக்கவிருந்த தி. மு. க. கலை நிகழ்ச்சி அதே நாளில் திருப்பரங்குன்றம் மலைக்குப் போகும் பாதையில் நடக்கும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

**எம். சி. ஆர். மன்றம்,**
சந்திரபாளையம்.

கருத்துக்கு இனிமை! கண்களுக்கு விருந்து!!

எழில் மன்னன்

**எம். ஜி. ஆர்.**

நடித்த

**பறக்கும் பாவை**



—வண்ண ஓவியம்—

ருக்மணி பிக்சர்ஸ் வெளியீடு.

வெளியிடுபவர் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம், திருப்பரங்குன்றம், மதுரை 5 தொலைபேசி 8-65